# <u>மன்னார்குடி நகராட்சி</u>

## சிறப்புக் கூட்டம்

நிகழும் 2026 வருடம் ஜூன் மாதம் 05.06.2026 வெள்ளிக்கிழமை மாலை 05.00 மணியளவில் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர்மன்ற கூடத்தில் சிறப்புக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலணைக்கு எடுத்துக்கொள்ளப்படும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

**முன்னிலை:- மன்னை த.சோழாராஜன்.பி.இ.,**

**நகர்மன்றதலைவர்**

## <u>பொருள்கள்</u>

| | | |
|---|---|---|
| பொருள் எண்.1 | தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 ஏப்ரல் 01 2026 முதல் அமலுக்கு வந்துள்ளன. அதனை திறம்பட செயல்படுத்தும் பொருட்டு மாண்பமை உச்ச நீதிமன்றம் சிவில் மேல்முறையீட்டு வழக்கு எண் 19 பிப்ரவரி 2023/6174, ஏப்ரல் 29 மற்றும் மே 5 2026-ல் தெரிவித்துள்ளபடி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு விரிவான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. அதன்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மை பிரதிநிதிகளான நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணை தலைவர், மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களை குப்பைகளை உருவாகும் இடத்திலேயே பிரித்தல் குறித்த கல்விக்கான முதன்மை ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், உலக சுற்றுச்சூழல் தினமான 2026 ஜீன் 05-ந் தேதி முதல் 2026 ஜீன் 12 வரையிலான ஒரு வார காலத்திற்கு விழிப்புணர்வு, பரிந்துரை மற்றும் கூட்டு நடவடிக்கைகள் மூலம் திடக்கழிவுகளை 4 வகையினங்களாக பிரித்தல், பொது இடங்களில் குப்பைகள் கொட்டாமை மற்றும் குப்பைகளை எரிக்காமை குறித்த விழிப்புணர்வை வீடு வீடாக சென்று ஏற்படுத்துவது குறித்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு பொறுப்பு நிர்ணயம் செய்து வரப்பெற்றுள்ள திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>** திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 ஐ மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | **தீர்மானம் எண். 112**<br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| பொருள் எண்.2 | அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் அரசு கடிதம் எண்.2807/மா.ந.1/2026-1 நாள்.18.05.2026ல் அம்மா உணவகம் உட்கட்டமைப்பு மேம்படுத்துதல் மற்றும் தேவையான சமையல் உபகரண பொருட்கள் நகராட்சி பொதுநிதியில் செலவினம் மேற்கொண்டு கொள்முதல் செய்து அம்மா உணவகத்தினை சிறப்பாக செயல்படுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>அதன்படி மன்னார்குடி நகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கிவரும் அம்மா உணவகத்திற்கு தேவையான உட்கட்டமைப்பு மேம்படுத்துதல் (Minor Civil Works) மற்றும் சமையல் உபகரண பொருட்கள் கொள்முதல் செய்திட ஆகும் உத்தேச செலவினம் மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு:-</u>** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்கண்ட பணியினை தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 (விதிகள் 2000) விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>(ந.க.எண். 1668/2026/இ1)</u>** | **தீர்மானம் எண். 113**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

**(ஒ/ம்) மன்னை த.சோழராஜன்,பி.இ.,**

**மன்னார்குடி நகர்மன்றம்**

**// உண்மை நகல் //**

**ஆணையர்,**

**மன்னார்குடி நகராட்சி**